நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 246/2024**

**P.W.10 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | நல்லதம்பி |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | நரியனூர் கீழ்காடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW10 |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 02–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.10 PM )

1. நான் தற்போது சேலம் வனகாப்பகத்தில் அரசு கூடுதல் சந்தனமரக்கிடங்கு சேலம் மேற்கில் வனகாப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் நடந்த சமயத்தில்

உள்ளூர்தண்டா பீட், குருமனூரில் வனகாப்பாளராக பணிபுரிந்து வந்தேன். 22.01.2024 ம் தேதி இரவு நான் பணியில் இருந்தபோது மூலக்கொட்டாய் அருகில் குருசாமி மகன் மகேந்திரன் என்பவர் கருங்காலி மரத்தை சட்ட விரோதமாக வெட்டி அவரது அக்கா ஈஸ்வரி வீட்டில் பதுக்கி வைத்திருந்து TN 93 C 5213 பொளிரோ பிக்கப் வண்டியில் விற்பனைக்கு எடுத்துச்சென்றதாக உயர் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நானும், என்னுடன் பணிபுரியும் பத்திரன், சதீஷ், Forest கார்டு கோகிலகண்ணன் ஆகியோர்களுடன் இரவு 08.30 மணிக்கு மூலக்கொட்டாயில் உள்ள ஈஸ்வரி என்பவரது வீட்டிற்கு சென்று சோதனை செய்தோம்.

2. அதில் கருங்காலி கட்டைகள், கருங்காலி கோல்கள் ஆகியவற்றை பாலித்தீன் கவர்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த ஈஸ்வரியிடம் இந்த கட்டைகள் யாருடையது, யார் கொண்டுவந்தார்கள் என்று கேட்டபோது மகேந்திரன் தான் இந்த கருங்காலி கட்டைகளை கொண்டு வைத்தார்கள் என்று சொன்னார்.

3. நான் மகேந்திரனுக்கு போன் செய்து ஈஸ்வரி வீட்டிற்கு வருமாறு கூறினேன். அவர் நீண்ட நேரம் ஆகியும் வரவில்லை. பிறகு கருங்கலூர் பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன் அவரது ஜீப்பில் குடிபோதையில் சம்பவயிடத்திற்கு வந்தார். அவர் வனசரகர் அலுவலரிடம் " இது ஒன்றும் பெரிய தப்புகிடையாது, நீங்கள் இங்கிருந்து இடத்தைவிட்டு காலிபண்ண முடியாது " என்று சொல்லியும், ஒரு மயிரும் புடுங்கமுடியாது " என்று பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன் கூறினார்.

4. இதுகுறித்து வனச்சரகர் மாவட்ட வனஅலுவலர் அவர்களுக்கு தகவல் சொன்னார். இதுகுறித்து மாவட்ட வனஅலுவர் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தார். அதன்பிறகு கொளத்தூர் போலீசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். பிறகு சின்னப்பன் அவருடன் வந்த வினோத்குமார் என்பவருடன் ஜீப்பில் ஏறிசென்றுவிட்டார்கள்.

5. அங்கிருந்த எதிரி வினோத்குமாரும் போதையில் இருந்தார். எதிரிகள் இருவரும் எங்களுடைய அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தும், எங்களை மிரட்டியும்

சென்றனர். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு சம்மந்தமாக வனசரகர் புகார் கொடுத்தார். புகார் கொடுக்க நானும், வனசரகர் அலுவலரும், சுரேஷ்குமார், பயிற்சி உதவி வனபாதுகாவலர் மாதவி ஆகியோர் சென்றோம். புகாரை வனசரகர் அலுவலர் தான் எழுதினார். காவல் நிலையத்தில் வைத்துதான் புகார் எழுதினோம். 23 ம் தேதி காலை காவல் நிலையம் சென்றோம்.

2. மேற்சொன்ன 4 நபர்களை தவிர வேறுயாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்லவில்லை. புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தில் என்னை விசாரித்து பெயர் உள்ளிட்ட விவரங்களை பெற்றுக்கொண்ட பிறகு, என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை.

3. மாவட்ட வனஅலுவலர் சேலத்திலுள்ள காவல் துணை கண்காணிப்பாளருக்கு போன் செய்து தகவல் சொன்னார். மேற்படி துணை கண்காணிப்பாளர் சம்பவயிடத்திற்கு வரவில்லை. இரவு 08.30 மணிக்க சம்பவயிடத்திற்கு சென்றோம். சுமார் 2 மணிநேரம் அங்கு இருந்திருப்போம். சம்பவம் நடந்த இரவே செல்போன் மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்துவிட்டோம். வனசரகர் அலுவலர் சுரேஷ்குமார் தகவல் கொடுத்தார்.

4. சாட்சி கணினி மூலம் தகவலை தயார் செய்து செல்போன் மூலமாக காவல் நிலையத்திற்கு அனுப்பியதாக சொல்லிவிட்டு தற்போது மாற்றி எவ்வாறு தகவல் அனுப்பபட்டது என்று எனக்கு தெரியாது என்கிறார். நான் சொன்னவாறு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும், 1ம் எதிரி கருங்கல்லூர் கிராமத்தில் மதிப்புமிக்க நபர் என்பதாலும், அவரது நற்பெயரை கலங்கப்படுத்தவேண்டும் என்பதற்காக நான் உட்பட வனத்துறை அலுவலர்கள் அனைவரும் மேற்படி 2 எதிரிகள் மீதும் பொய்யாக ஒரு புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. கைப்பற்றப்பட்ட கருங்காலி கட்டை வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தோம். கருங்காலி கட்டை வைத்திருந்தது சம்மந்தமாக வனத்துறை சார்பாக புகார் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தோம், அதன் வழக்கு எண் எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி வழக்கு ஆவணங்களை காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதா என்பது குறித்து எனக்கு தெரியாது.

6. நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்தபோது பொதுமக்கள் சுமார் 10–15 நபர்கள் அங்கிருந்தார்கள். எதிரிகள் இருவரும் போதையில் இருப்பதாக எப்படி தெரியும் என்றால் அவர்களிடம் இருந்து வந்த வாடைகளை வைத்துத்தான் சொல்கிறேன். மேற்படி கருங்காலி கட்டை கைப்பற்றப்பட்டது தொடர்பாக நாங்கள் H நமுனா, பிடிபொருள் மகசர் ஆகியவற்றை தயார் செய்தோம். அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன். மேற்படி ஆவணங்களை வனச்சரகர் தான் தயார் செய்தார்.

7. மேற்படி நாங்கள் தாக்கல் செய்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எங்களது வனச்சரகத்தில் உள்ளது. சம்பவயிடத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் வந்தார். கிராம நிர்வாக அலுவலருக்கு நான் தான் தகவல் சொல்லி வரச்சொன்னேன். சம்பவத்தன்று இரவு 10.30 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் வந்தார். சம்பவயிடத்திலும் இருந்தார், எங்கள் அலுவலகத்திற்கும் வந்தார்.

8. நான் உட்பட வனச்சரகர் அலுவலர்கள் அனைவரும் எதிரிகளின் நற்பெயருக்கு கலங்கம் விளைவிக்கும் விதத்தில், அவர்மீது ஒரு பொய் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(12.50 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**